**திரு. தா. வேடியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘சொல்லிச் செய்வார் சிறியர்; சொல்லாமலே செய்வார் பெரியார்’ என்ற அடிப்படையில், மாண்புமிகு இதயத்தாய் அவர்கள், எங்களுடைய திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திற்கு வருகை தந்தபோது, என்னுடைய போளூர் தொகுதி மக்கள் சார்பாக, இரண்டு கோரிக்கைகளை நான் வழங்கினேன். அதிலே ஒன்று, பெரிய கோரிக்கையான, நீண்டநாள் கோரிக்கையான, போளூர் பகுதிக்கு ஒரு சர்க்கரை ஆலை என்பதை, எங்களுடைய இதயத்தாய் அவர்கள் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள் என்பதை இன்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது உண்மையிலேயே பெருமகிழ்ச்சியடைந்தேன். அதற்காக என் இதயத்தாய் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய புரட்சித்தாய் அவர்கள், அந்தச் சர்க்கரை ஆலையை உடனடியாகப் பெற்று, தாங்களே நேரில் எங்கள் போளூர் தொகுதிக்கு வந்து, அதனைத் தோற்றுவிக்க வேண்டுமென்ற கோரிக்கையை மீண்டும் வைப்பதோடு, இந்த ‘மீன்குஞ்சு வளர்ப்பு’ சம்பந்தமாக, அமைச்சர் அவர்கள் எல்லாக் கருத்துக்களையும் தெள்ளத் தெளிவாக இங்கே தெரிவித்திருக்கிறார்கள்; அதற்காக நான் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். அதே நேரத்தில் படவேடு ரேணுகாம்பாள் ஆலயத்தில் ஒரு பெரிய குளம் இருக்கிறது. அதிலேயும் உள்ளாட்சித் துறை மூலமாக மீன்வளர்ப்பு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-10.*

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி அதற்கான தீர்மானம் போட்டு மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைக்கு ஒப்படைத்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*98* –

## சென்னை மாநகராட்சிப் பள்ளிகளுக்குப் போதுமான மேசை, நாற்காலிகள் வழங்குதல்

**10413* **திரு. எம். கே. பாலன்:**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் போதிய மேசை, நாற்காலிகள் இல்லாததால், ஆசிரியர்கள், மாணவர்கள் சிரமப்படுவதை அரசு அறியுமா?

1994 மார்ச் 25]

(ஆ) ஆம் எனில், இதற்காக தனியாக நிதி ஒதுக்கி வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) போதிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு:- ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்பு கவன ஈர்ப்பு

### இராயபுரம் காவல் நிலையத்தில் ஒரு கைதி இறந்ததாகக் கூறப்படுவது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நேற்று முன்தினம் இராயபுரம் காவல் நிலையத்தில் ஒருவர் இறந்ததாகத் தெரிவித்து அது பற்றிய பிரச்சினையை, பேரவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று திரு. அ. செல்வராசன், திரு. ஜி. பழனிசாமி ஆகியோர் என்னிடத்திலே அறிவிப்புக் கொடுத்திருந்தார்கள். அன்று அதை அனுமதிக்க முடியாது என்று நான் சொல்லி, பின்னர் அதை எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லியிருந்தேன். அன்று அதற்கு நான் அனுமதி மறுத்து இருந்ததால் இன்று அதை தனிக் கவன ஈர்ப்பாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவர அனுமதிக்கிறேன். அதே பொருள்பற்றி இன்று திரு. சி. ஞானசேகரன், திரு. இளம்வழுதி ஆகியோரும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதைத் தனிக் கவன ஈர்ப்பாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். (குறுக்கீடு) திரு. வே. தம்புசாமி அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். திரு. பழனிசாமி வந்தால், திரு. தம்புசாமி அவர்களும் வந்துவிடுவார்கள். (சிரிப்பு) திரு. அ. செல்வராசன்.

***திரு. அ. செல்வராசன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு அனுமதி கொடுத்ததற்கு நன்றி. லோகநாதன் என்ற